பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

08 09 2026 MONDAY 12.40 PM

ஆகாஷ்வாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு நரேந்திர மோடி, குஜராத் மாநிலத்தில் சுமார் 35 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு திட்டங்களை தொடங்கி வைத்து, புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.

2. இந்தியா-இலங்கை இடையேயான நட்புறவு வரலாற்று சிறப்புமிக்கது என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

3. எழுத்தறிவு என்பது அறிவாற்றலுக்கு வழிகாட்டுவதாக மத்திய கல்வி அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.

4. அமெரிக்க தொழிலாளர்களின் நலன்களை பாதுகாக்கவே H-1B விசாக்கட்டணத்தை உயர்த்தி இருப்பதாக அமெரிக்கா அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

5. அமெரிக்க Open Junior டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Maya Rajeshwaran - யுக்ரைனின் Antonina Sushkova இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி, குஜராத் மாநிலத்தில் சுமார் 35 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு திட்டங்களை தொடங்கி வைத்து, புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.

வதோதராவில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மேற்கு பிரத்யேக சரக்கு ரயில் பாதையின் 3 பிரிவுகளை நாட்டுக்கு அர்ப்பணித்த பிரதமர், இந்த வழிதடத்தில் புதிய சரக்கு ரயில் சேவையையும், தொடங்கி வைத்தார்.

வதோதரா – Tanda Road இடையிலான பயணிகள் ரயில் சேவையையும், கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இது தவிர, ரயில்வே மற்றும் மத்திய சாலைப்போக்குவரத்து உள்ளிட்ட துறைகள் மூலம் செயல்படுத்தப்பட உள்ள பல்வேறு புதியத் திட்டங்களுக்கும் பிரதமர் அடிக்கல் நாட்டினார்.

இன்று மாலை மும்பை செல்லும் பிரதமர், உலகளாவிய நிதி தொழில்நுட்ப விழாவை தொடங்கி வைக்க உள்ளார்.

<<<<<>>>>>

இந்தியா-இலங்கை இடையேயான நட்புறவு வரலாற்று சிறப்புமிக்கது என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

தமது இலங்கை பயணத்தையொட்டி, அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், மகா சாகர் திட்டத்தின் அடிப்படையில் இந்தியாவின் மிக நெருங்கிய நட்பு நாடுகளில் ஒன்றாக இலங்கை திகழ்கிறது என்று குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை தலைவர்களுடன் தாம் மேற்கொள்ள உள்ள பேச்சுவார்த்தைகள் ஆக்கப்பூர்வமானதாக அமையும் என்றும் அவர் கூறியுள்ளார்.

தமது 3 நாள் பயணத்தின் போது, இலங்கையில் வசிக்கும் இந்திய வம்சாவளியினர் உடனும் திரு. ராஜ்நாத் சிங் கலந்துரையாட உள்ளார்.

<<<<<>>>>>

சர்வதேச எழுத்தறிவு தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இதையொட்டி, மத்திய கல்வி அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், எழுத்தறிவு என்பது அறிவாற்றல், வாய்ப்புகள் மற்றும் சிறப்பான எதிர்காலத்திற்கு வழிகாட்டுவதாக கூறியுள்ளார்.

கல்விதான் மாற்றத்தை ஏற்படுத்தும் வல்லமை பெற்றது, என்பதால் அதனை கொண்டாடுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

நாட்டு மக்கள் அனைவருக்கும் கல்வி அறிவு கிடைப்பதை உறுதி செய்ய வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

நாட்டு மக்கள் அனைவரும் கல்வி அறிவு பெற்றவர்களாக இருப்பது, வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கு வலுவான அடித்தளமாக அமையும் என்றும் திரு பிரல்ஹாத் ஜோஷி குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, மத்திய அரசால் செயல்படுத்தப்படும் புதிய பாரதம் எழுத்தறிவு திட்டத்தின் மூலம், எழுத்தறிவு பெற்று மிகுந்த பயனடைந்து வருவதாக தமிழகத்தின் ராணிப்பேட்டை மாவட்டத்தை சேர்ந்த பயனாளிகள் எமது செய்தியாளரிடம் தெரிவித்துள்ளனர்.

<<<<<>>>>>

செயற்கை நுண்ணறிவு மற்றும் புதிதாக கண்டுபிடிக்கப்படும் தொழில்நுட்பங்களில் ஸ்வீடன் உடனான இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்த இருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய மத்திய அரசின் செயற்கை நுண்ணறிவு இயக்க தலைமை செயல் அதிகாரி திரு சௌரப் விஜய், ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி துறைகளில் ஸ்வீடனுக்கு உள்ள அனுபவத்தை இந்தியா பகிர்ந்துகொள்ளும் என்றார்.

இது தொடர்பாக புதுதில்லி வந்துள்ள ஸ்வீடன் குழுவினருடன் பேச்சுவார்த்தை நடத்தியிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தியாவுக்கான ஸ்வீடன் துணைத்தூதர் Agnes Julin பேசுகையில், வர்த்தகம் மற்றும் புத்தாக்க துறைகளில் இந்தியாவுடனான ஒத்துழைப்பை அதிகரிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக கூறினார்.

குறிப்பாக செயற்கை நுண்ணறிவு மற்றும் மின்னணு துறைகளில் ஏராளமான வரத்தக வாய்ப்புகள் இருப்பதாகவும் Agnes Julin தெரிவித்தார்.

<<<<<>>>>>

இந்தியாவுடனான இருதரப்பு வர்த்தகம் மற்றும் நீடித்த ஒத்துழைப்பை வலுப்படுத்த பிரிக்ஸ் உச்சிமாநாடு உதவிகரமாக அமையும் என்று ஈரான் தெரிவித்துள்ளது.

புதுதில்லியில் நடைபெற உள்ள பிரிக்ஸ் உச்சிமாநாட்டில் பங்கேற்பதற்காக ஈரான் அதிபர் திரு. Masoud Pezeshkian, இந்தியா வருவதையொட்டி அந்நாடு வெளியிட்டுள்ள அறிக்கையில், சர்வதேச அளவில் இந்தியா முக்கியமான நாடாக உருவெடுத்து வருவதை சுட்டிக்காட்டியுள்ளது.

ஈரான் அதிபரின் இந்தப் பயணத்தின் போது, இந்தியா உடனான நீடித்த ஒத்துழைப்புகளை அதிகரிக்கவும், நடவடிக்கை எடுக்கப்படும் என்று அந்நாடு தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>

ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் இந்தியா நிரந்தர உறுப்பினராவதற்கு Luzembourg ஆதரவு தெரிவித்துள்ளது.

இந்திய வந்துள்ள அந்நாட்டு துணைப்பிரதமர் திரு Xavier Bettel செய்தி நிறுவனம் ஒன்றிற்கு அளித்த பேட்டியில், ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில், தற்போதைய உலகின் யதார்த்தத்தை பிரதிபலிக்கும் வகையில் மாற்றி அமைக்கப்படுவது அவசியம் என்று கூறியுள்ளார்.

இந்தியாவின் மக்கள் தொகை மற்றும் உலக நாடுகளிடையே இந்தியாவின் செல்வாக்கு அதிகரித்து வரும் சூழலில், விரிவுப்படுத்தப்பட்ட பாதுகாப்பு கவுன்சிலில் அந்நாட்டுக்கு நிரந்தர இடம் வழங்கப்பட வேண்டியதன் முக்கியத்துவத்தை திரு Xavier Bettel வலியுறுத்தியுள்ளார்.

<<<<<>>>>>

அமெரிக்க தொழிலாளர்களின் நலன்களை பாதுகாக்கவே, வெளிநாட்டவர்க்கான H-1B விசாக்கட்டணத்தை உயர்த்தி இருப்பதாக அமெரிக்கா அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் கூறியுள்ளார்.

அந்நாட்டின் தொழிலாளர் தினத்தையொட்டி, அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த விசா கட்டண உயர்வு காரணமாக அமெரிக்க தொழில் துறையினர், உள்நாட்டு தொழில் துறையினருக்கு முன்னுரிமை அளிக்க வழிவகை ஏற்படும் என்று தெரிவித்துள்ளார்.

குறிப்பாக, உற்பத்தி, வர்த்தகம் சார்ந்த துறைகளில், தகுதி வாய்ந்த அமெரிக்க தொழிலாளர்களின் நலன் பாதுகாக்கப்படும் என்றும் திரு. டோனல்ட் ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<>>>>>

மேற்குவங்கத்தில் திரிணாமுல் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் திரு Nadimul Haque-க்கு சொந்தமான இடங்களில் அமலாக்கத்துறை இரண்டாவது நாளாக இன்றும் சோதனையில் ஈடுபட்டுள்ளது.

அவருக்கு சொந்தமான ஊடக நிறுவனம் பல்வேறு நிதி முறைகேடுகளில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் இந்த சோதனை மேற்கொள்ளப்பட்டு வருவதாக அமலாக்கத்துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

குறிப்பாக, Nadimul Haque நடத்திவரும் உருது நாளேடு, ஹவாலா பரிமாற்றங்களில் ஈடுபட்டுள்ளதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்த சோதனையின்போது, முறைகேடுகளில் ஈடுபட்டதற்கான பல்வேறு ஆவணங்கள் மற்றும் டிஜிட்டல் ஆதாரங்கள் கைப்பற்றப்பட்டிருப்பதாகவும் அமலாக்கத்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

<<<<<>>>>>

தில்லி சத்தியா நிகேடன் கட்டட விபத்தில் காயமடைந்து எய்ம்ஸ் மருத்துவமனையில் சிகிச்சைப்பெற்று வருவோரின் குடும்பத்தினரை முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவித்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய திருமதி ரேகா குப்தா, சிகிச்சை பெறுவோர் விரைந்து குணமடைய தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்படும் என்று கூறியுள்ளார்.

சிகிச்சை பெறுவோரின் உடல்நிலை சீராக உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இரண்டு மாணவர்கள் குணமடைந்திருப்பதையடுத்து அவர்கள் இன்று வீடு திரும்புவார்கள் என்று திருமதி. ரேகா குப்தா தெரிவித்தார்.

<<<<<>>>>>

வடகிழக்கு மாநிலங்களின் சில பகுதிகளில் அடுத்த இரு நாட்களுக்கு கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை மையம் தெரிவித்துள்ளது.

பீகார், ஒடிசா, மேற்குவங்கம் மற்றும் உத்தரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம் மாநிலங்களிலும் இதே நிலை காணப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தமான் நிகோபார் தீவுகள், சிக்கிம் மற்றும் தெலங்கானாவில் சூறைக்காற்றுடன் கூடிய கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் அந்த மையம் கூறியுள்ளது.

அதே வேளையில் கேரளம் மற்றும் மாஹேவில் வெயிலின் தாக்கம் அதிகரித்து காணப்படும் என்றும் வானிலை மையம் தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>

அமெரிக்க Open Junior டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Maya Rajeshwaran - யுக்ரைனின் Antonina Sushkova இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

நியூயார்க்கில் நடைபெற்று வரும் மகளிர் இரட்டையர் பிரிவில் அமெரிக்காவின் Olivia De Los Reyes, Emey Combs இணையை வென்றது.

<<<<<>>>>>

இந்தோனேஷியாவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Digvijaypradap Singh காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

<<<<>>>>